**கிராமின் கிருஷி ம aus சம் சேவா**
இந்தியா வானிலை ஆய்வு துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 20-09-2022**

**வேலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-09-20 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2022-09-21 | 2022-09-22 | 2022-09-23 | 2022-09-24 | 2022-09-25 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 35.0 | 35.0 | 35.0 | 35.0 | 35.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 25.0 | 25.0 | 25.0 | 25.0 | 24.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 45 | 45 | 45 | 45 | 45 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 10.0 | 10.0 | 10.0 | 10.0 | 10.0 |
| காற்றின் திசை (கோணம்) | 270 | 270 | 270 | 270 | 270 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 5 | 5 | 5 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

செப்டம்பர் 21,22,23,24,25 தேதிகளில் வறண்ட வானிலை நிலவ வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 35 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 24-25 டிகிரி செல்சியஸ் ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 % ஆகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 45 % ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகமானது மணிக்கு 10 கி.மீ வரை மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியை பொறுத்த வரையில் 25.09.2022 முதல் 01.10.2022 வரை இயல்பை விட அதிக மழை மற்றும் இயல்பான வெப்பநிலை காணப்பட வாய்ப்புள்ளது. தற்பொழுது நிலவும் சூழ்நிலை காரணமாக பயிர்களில் பூச்சி மற்றும் நோய் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே வயலை அவ்வப்பொழுது கண்காணித்து அதற்கேற்ப பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| வரும் நாட்களில் வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் மண்ணின் ஈரத்தன்மையை பொறுத்து, பயிர் வகைகளுக்கேற்ப நீர் பாய்ச்சவும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | நெற்பயிரில் இலை மடக்கு புழுவின் தாக்கத்தை கட்டுப்படுத்த பைபிரினில் 1 மி.லி /லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். சம்பா நடவிற்கு நாற்றங்கால் தயார் செய்யவும். |
| நிலக்கடலை | நிலக்கடலை ரிச் ஒரு ஏக்கருக்கு 2 கிலோ வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். ஒரு எக்டருக்கு ஜிப்சம் 400 கிலோ வீதம் விதைத்த 45 ம் நாள் மண்ணில் இட வேண்டும். |
| துவரை | துவரையில் அசுவினி பூச்சியின் தாக்கத்தை கட்டுப்படுத்த 0.5 தையோமீத்தாக்ஸ்சைம் 0.5 மி.லி / லிட்டர் அல்லது இமிடாகுளோபிரிட் 0.5 மி.லி / லிட்டர் என்ற அளவில் தெளிக்க வேண்டும். |
| கரும்பு | கரும்பில் இடைகணுப்புழுவை கட்டுப்படுத்த முட்டை ஒட்டுண்ணியான ட்ரைக்கோகிரைமா கைலோனிஸ் 25 சி சி / எக்டர் அட்டையை நட்ட 4 மாதத்திலிருந்து இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை, 6 முறை கட்ட வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | தென்னையில் சிவப்பு கூன் வண்டின் தாக்கத்தை கட்டுப்படுத்த வேப்பங்கொட்டைத் தூளையும், மணலையும் 1.2 என்ற விகிதத்தில் கலந்து, மரம் ஒன்றிற்கு 150 கி வீதம் நடுக்குருத்தின் 3 மட்டை இடுக்குகளில் வைக்க வேண்டும். காண்டாமிருக வண்டினை கட்டுப்படுத்த ஹெக்டருக்கு 5 ரைனோ லூர் இனக்கவர்ச்சிபொறிகளை அமைக்க வேண்டும். |
| கத்திரிக்காய் | கத்தரியில் குருத்து துளைப்பான் மற்றும் காய்துளைப்பானை கட்டுப்படுத்த குளோரன்ட்ரைனிலிபுரோல் @ 0.5 லி / லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | உலர்தீவனமும், பசும்புல்லும் கலந்து கொடுத்து கழிச்சலை தவிர்க்க வேண்டும். மூன்று மாத கன்றுகளுக்கு குடற்புழு நீக்கமும் ஆறு மதத்திற்கு மேலுள்ள கன்றுகளுக்கும் அடைப்பான் நோய் , தொண்டை அடைப்பான் நோய்க்கான தேவைக்கேற்ப செலுத்த வேண்டும். வெளிப்புற ஒட்டுண்ணி நீக்கம் செய்து நோய் பரவலை தடுக்க வேண்டும். |

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வெள்ளாடு | ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்து ஒரு வாரத்திற்கு பின்பு பி பி ஆர் தடுப்பூசியும், ஒரு மாதத்திற்கு பின்பு துள்ளுமாரி நோய்க்கான ( ET ) தடுப்பூசியும் போடவேண்டும். வாரத்திற்கு இரண்டு நாட்கள் சுண்ணாம்பை தரையில் தூவவும். கால் குழம்பு அழுகலை தவிர்க்க வேண்டும். கழிச்சல் ஏற்பட்டால் சல்பாடிமிடின் மாத்திரையை பெரிய ஆட்டிற்கு ஒன்றும், குட்டிகளுக்கு கால் மாத்திரையும் தர வேண்டும். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கோழி | கழிச்சல் , ரத்த கழிச்சல் நோய் ஏற்பட்டால் ரேன்காக்ஸ் அல்லது சூப்பர் காக்ஸ் மருந்தை குடிநீரில் கலந்து தர வேண்டும். |